# நமது கிராம வாழ்க்கை

K. S. வேங்கடரமணி

சுவேதாரண்ய ஆசிரமம்
மயிலாப்பூர் : சென்னை.

முதற்பதிப்பு
பிப்ரவரி 1932.

பதிப்புரிமை ஆசிரியருடையது

இந்தியாவிலுள்ள ஏழு லட்சங் கிராமங்களில் வசித்து வரும் 30 கோடி மக்களின் இனியவாழ்வு கருதி இஃது அர்ப்பணஞ் செய்யப்படுகிறது.

# நமது கிராம வாழ்க்கை.

## I

நம் இந்தியா தேசத்தின் மேன்மைக்கும் பெருமைக்கும் அதன் எல்லாச் சிறப்பும் வளமும் பொருந்திய குக்கிராம வாழ்க்கையே சிறந்த காரண மென்பதைப் பல பெரியோர் உணர்ந்து கூறியிருக்கின்றனர் ; கூறி வருகின்றனர். கிராம வாழ்க்கை யென்பது இந்தியாவில் அநாதி காலமாக நடந்து வருவது. இப்பொழுது இக்கால நாகரிகத்திற் கிசைய நகரங்களிலிருந்து ஓயாமலொழியாமல் உழைத்துச் சலித்தவர்களுக்குக் கிராமவாழ்க்கை சுவர்க்கம்போல இன்பந் தரத் தக்கதாகும். ஆதலால், கல்விக் கிளர்ச்சி கொண்டு, நகர வாழ்க்கையின் நன்மை தீமைகளையும் கிராமவாழ்க்கைக் குறைவினால் ஏற்பட்டுள்ள குறைகளையும் எல்லோரும் சீர்தூக்கி யறிகிற

இக்காலத்தில் நம் நாட்டில், நகரங்களிலெல்லாம் 'ஊருக்குத் திரும்புவோம்' என்னும் குரல் கேட்கப்படுகிறது. ஆம்! அக்குரல் இன்றியமையாததே; நம் பாரதநாடு பழைய வளமடைந்து தேனும் பாலும் பெருக்கெடுத் தோடவேண்டுமாயின், நம் கிராமச் சீர்திருத்தமே அதற்கு ஆதாரமாகும். கிராமச் சீர்திருத்தமின்றி நம் நாட்டில் எந்தப் பெரியகாரியத்தையும் சாதிக்க இயலாது. உலக நன்மைக்கு நாமும் உழைக்கவேண்டுமென்றால், நம்மைப் போஷிக்கும் கிராமங்களின் நிலைமையை ஒழுங்கு படுத்தி உயர்த்தியே தீரவேண்டும்.

முற்காலத்தில் கிராம வாழ்க்கையே நமது நாகரிகத்தைச் சிதறவொட்டாமலும் சுத்தமாகவும் சேர்த்து வைத்திருந்தது. இன்னும் அன்னியர் படையெடுப்பு, ஆட்சி முதலிய பெருங் காற்றூலும் நம் திருந்திய கொள்கைகளாகிய தீபங்கள் அணையாவண்ணம் பாதுகாத்து வருகிறது. அப்பெருங்காற்று நம கிராமவாழ்க்கையை இன்

னும் முழுதும் சிதைக்க வில்லை; தொடர்ந்துவரும் நமது முன்னேற்றத்தையும் முறிக்க வில்லை. அப்படி இடையே உண்டாகும் கேடுகளையும் நாம், கிராம வாழ்க்கையிலிருந்துண்டாகும் வெள்ளம் போன்ற பெரு நன்மைகளால் மாற்றி நமது நாட்டின் ஜீவதாதுக்களை விருத்திசெய்து வருகிறோம்.

நமது நாட்டின் உயிர்நிலை, மேல் நாடுகளிற் போல ஒரு நகரத்திலே முடிச்சிட்டு வைக்கப்படவில்லை. அதை நாம் பலவாகப் பகுத்து ஒவ்வொரு கிராமத்திலும் உட்புகுத்திப் பாதுகாத்து வந்தோம். அதனாலேயே நமது கிராமவாழ்க்கை இன்னும் சிதையாமல் மேன்மையுடன் நிலைத்திருக்கிறது. சுவாஸப்பையி லுள்ள சிறு கண்கள் பிராணவாயுவை உட்கொண்டு கெட்ட ரத்தத்தைச் சுத்தி செய்வது போல, ஆயிரக்கணக்கான நம் குக்கிராமங்கள் அவ்வப்போது நாட்டின் கேடுகளைத் தாங்கி நமது வாழ்வை மேன்மைப் படுத்தி வந்துள்ளன. எப்பொழுதும் அலையுடன் கூடிய கடலில், பவளக் கொடிகள்

அவ்வலைகளாற் கேடுருமல் படர்ந்து நிலைத்திருப்பது போல, நம் கிராமங்களும் பலவகைக் கேடுகளுக்கும் தப்பி நிலைத்து நாட்டுக்கு அழியாத நல் வளத்தை அளித்து வந்துள்ளன.

## II

கிராமங்களின் இத்தகைய சிறப்புக்குக் காரணமென்ன? அதற்கேன் இவ்வளவு சக்தி? என்பவற்றை யாராய்வோம். மக்கள் அபிவிருத்தியடைவதற்கு அவர்கள், கூட்டமாகவும் தனித்தும் வாழவேண்டியிருக்கிறது. சமூக வாழ்வினுல் அபிவிருத்திக்கு ஆதாரமான அனுபவங்கள் கிடைக்கின்றன. ஓடித்திரிந்து மேய்ந்த பசுவானது தனியே படுத்திருக்கும்பொழுது தான் மேய்ந்த உணவை அசைபோட்டு உட்செலுத்திப் பயன்படுத்துவதுபோல, தனிமை வாழ்வினுல் அவ்வனுபவங்களைப் பழக்கத்திற் கொண்டுவந்து அனுஷ்டிக்கலாம். ஆகவே இவ்விருவகை வாழ்க்கையும் இன்றியமையாதனவே. ஆனுல், இவற்

றில் ஓர் அளவு வேண்டும். மிகவும் தனிமையா யின் நாட்டுநடப் பொன்றுந் தெரியாமல் கிணற் றுத் தவளைபோ லாய்விட நேரும். எப்பொழு தும் கூட்டத்திலேயே இருந்தாலும் ஆற்றில் அகப்பட்ட கட்டை போல இழுத்தவழி யெல் லாம் போகவேண்டியதுதான். ஆதலால் இவ்விரு வகையும் கலந்தொரு வாழ்க்கை நமக்குவேண்டி யிருக்கிறது. கிராமவாழ்க்கையே இவ்விரு வகை வாழ்வையும் இணைத்துப் பக்குவப்படுத்தி அமைத்து நமக்கு மேன்மை தருவதாகும். அதனு லேயே கிராம வாழ்க்கை சிறந்த சக்தி யுடையதா கிறது. எனவே கிராமங்களின் நேர்மைக்குரிய சாதனங்களை நாம் தேடுவது மிகவும் அவசியம்.

நம் கிராமங்களின் திருத்தம் நம் நாட்டுக்கு மட்டு மன்றி உலகத்திற்கே நன்மை தருவதாகும். ஏனெனில், இந்தியாவிலுள்ள கிராம வாசிகளின் தொகை உலக முழுதுமுள்ள ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்காகும். அதாவது சுமார் 30 கோடி ஜனங்கள் இந்தியக் கிராமவாசிகள்.

இவ்வாறு உலகின் ஜனத்தொகையில் ஐந்தி லொருபங்கு ஓரே நாட்டி லிருந்து மேன்மை யுறுவது ஒரு பெருஞ் சிறப்பன்றோ? இப் பொழுது தேசபக்திக் கிளர்ச்சி மிகுந்துள்ள நம் பாரத நாட்டில் பெரும்பாலோர் இடையே கைவிட்ட கிராம வாழ்க்கையிலும் அதன் சீர் திருத்தத்திலும் ஊக்கங்கொண்டிருப்பது நாட் டிற்கு நல்லகாலந்தான். நோய் வந்தால்தானே நோயற்ற வாழ்வின் பெருமை புலப்படும். நிழ லின் அருமை வெயிலில் போனால்தானே தெரி யும்.

## III

பழைய வளப்பமான சிறந்த நிலையிலுள்ள கிரா மங்களை யிப்பொழுது பார்ப்ப தரிதாகிவிட்டது. இடையே சுமார் 50 வருஷத்திற்குள் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், குளந் தூர்ந்து குட்டையாகி அதுவும் வறண்டு போனாலும் நீர் இருந்தவிடம் அடையாளம் காணப்படுவது

போல, கிராமங்களின் பழைய சின்னங்கள் இன்னும் சிறிதளவு சிதையாது காணப்படுகின்றன.

ஊரைச்சூழ்ந் தோடும் ஆறு அல்லது கால்வாயையும் ஏரியையும் பழைய சாலையையும் எல்லையாகக்கொண்டு, தோப்பு, துரவு, குளம், குட்டை, வயல் வெளிகளுடன் திகழ்வது சிறந்த கிராமம். தோப்பின் நடுவில் அக்கிரகாரமும், அதன் ஒரு புறத்தில் ஆலயமும், அதனையடுத்துக் குளமும், புறத்தே சூழச் சேரிகளும், தொழிலாளர்கள் வீடுகளும் அமையப்பெற்று விளங்கும் உண்மையான கிராமத்தின் சிறப்பை யென்னென் றுரைப்பது! 'கோவிலில்லா வூரிற் குடியிருக்கவேண்டாம்' என்றபடி கிராமத்திற்குக் கோவில் ஒரு சிறந்த அங்கமாகும். அது கிராமத்தாரின் ஒற்றுமைக்கு ஒரு சிறந்த கருவியு மாகிறது. ஓர் உண்மைக் கிராமத்தின் உயர்வு அதன் நீர் நில வளங்களினால் மட்டுமன்று. கிராம வாசிகளின் இயற்கையையும் பொறுத்திருக்கிறது.

ஒருண்மைக் கிராமமானது தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தானே உற்பத்திசெய்து கொள்ளக்கூடியது. பிற அவசியமான தேவைகளையும் தானே பூர்த்தி செய்துகொள்ளக்கூடியது. நெல்லும், நவதானியங்களும், உழவுக்கும் பாலுக்கும் வேண்டிய கால் நடைகளும் குறைவற உடையது. அங்கே, மேல்நாட்டு நாகரிகத்தின் உல்லாச வாழ்வுக் கேற்ற ஆடம்பரப் பொருள்களைச் செய்ய இயலாதவராயினும் சாதாரணமான தேவைகளைத் தடையின்றி நிரப்பக்கூடிய தொழிலாளிகள் பலர் இருப்பார்கள். தச்சன், கொல்லன், கொற்றன், வண்ணான், அம்பட்டன், சேணியன், தட்டான் ஆகிய அத்தொழிலாளர்கள் அனைவரும் கிராமத்தாருடன் ஒன்றுசேர்ந்து கிராமத்தின் நன்மையைக் கருதி மனமொத்துழைப்பார்கள். அவர்களுக்கெல்லாம் சம்பளம் மானியமாய் விடப்பட்ட நிலமே. அந்நிலம் விளைந்தால்தான் அவர்களுக்குச் சாப்பாடு. ஆதலால் மிராசுதார்களுக் குள்ள பொறுப்பு அத்

தொழிலாளிகளுக்கும் உள்ளதாகிறது. ஒரு கிராமவாசி எந்தத்தொழில் செய்து வந்தாலும் கடைசியில் வியவசாயத்தில்தான் போய் முடியும். மேற்கூறிய பல வேறு தொழிலாளிகளையும் ஒன்றுபடுத்துவது கோவில் கைங்கரியமாகும். அஃது எல்லாருடைய வேலைக்கும் பொதுவான ஓர் ஊக்கத்தை யுண்டாக்குகிறது.

கிராமவாழ்க்கையின் மேன்மைக்கு முக்கிய காரணம், பண்ணை முதலாளிகளுக்கும் பண்ணை யாட்களுக்கு முள்ள அந்நியோன்னியபாவமே. அவர்கள் எப்பொழுதும் நகமும் சதையும் போற் கலந்து காரியங்களில் ஈடுபட்டு உழைப்பார்கள். ஆட்களுக்கும் தொழிலாளிகளுக்கும் தொன்று தொட்டு வந்த முறையை அனுசரித்து அவரவர் வேலைக்கும் தேவைக்கும் ஏற்பக் கூலிகள் வரை யறுக்கப்பட்டிருந்ததனால் மனஸ்தாபங்களுக் கிடமில்லை.

பழையமுறையிலுள்ள கிராமங்களில் மேற் கூறியபடி ஒவ்வொரு தொழிலாளிக்கும் விடப்

படும் மானிய நிலங்கள் சாதாரணமாக அவனவன் குடும்பத்தை ஆதரிக்கப் போதுமானவைகளா யிருக்கும். கிராமவாழ்க்கையில் சுகமாய் வாழ் வதற்கும் தேவைகள் அதிகம் வேண்டுவதில்லை யன்றோ ! இரண்டு தென்னை, நாலு வாழை, சில ஆடு மாடுகள், மூன்று ஏகர் நிலம் ஆகிய இவை ஒருவனுக் கிருப்பின் அவன் பாடு இராஜபோக மாகும். தொழிலாளிகளுக்கு இந்த மானிய வரும்படி தவிர, சில அதிக வேலைகளுக்காக அவ்வப்போது நெல் கூலியும் கொடுக்கப்படும். அவர்களுக்குக் குடியிருக்க மனைக்கட்டும் உண்டு. சுருங்கச் சொல்லின், நகரவாசிகள்போலக் காசை ஜோபியில் போட்டுக் குலுக்கி உல்லாசமாய்க் கண்டவற்றிலெல்லாம் வாரியிறைக்க இல்லாவிடி னும், சாதாரணமாக ஒருவன் சௌக்கியமாய் வாழ்வதற்கு வேண்டிய எல்லாச் சௌகரியங் களும் கிராமங்களில் உண்டு.

நிலம் நன்கு விளைந்தாலன்றிக் கிராமவாசி களுக்கு ஜீவனம் நடைபெறாதாகையால், நிலச்

சாகுபடி விஷயத்தில் அனைவரும் உரிய காலங்களில் ஒத்துழைத்தே தீரவேண்டும். அவ்வாறு உழைப்பதில் நகரவாசிகளைப்போலக் கிராமவாசிகளுக்கு அடிக்கடி சளைப்பு ஏற்படுவதில்லை. அவர்கள் நெற்றிவியர்வை நிலத்திற் சொட்ட நாள் முழுதும் உழைத்தாலும், 'அதனால்தானே நமக்குணவு' என்ற உணர்ச்சி அந்தக் கஷ்டத்தை மாற்றிவிடும். கேவலம் காசுக்கூலிக்காகப் பிறருக்கு உழைத்தாலன்றோ மனவெறுப்புக்கிடமிருக்கப்போகிறது. ஆகையால், கிராமத்தைப் பொறுத்த வயல் வாய்க்கால் வெட்டு, எருவடித்தல், ஒழுங்காகத் தண்ணீர்பாய்ச்சுதல், வடிகட்டுதல், குளம் வெட்டுதல், கோவில் கட்டுதல் முதலிய எல்லாப்பொதுக் காரியங்களிலும் அனைவரும் மனமொத்துச் சிரத்தையுடன் சிறியதையும் பெரிதாக மதித்துச் சிறக்க நடத்துவார்கள்.

ஒரு கிராமத்தில் இத்தனை பேருக்கும் நிலம் தேடிக்கொடுக்க வேண்டியிருக்கிறபடியால், ஒருவருக்கும் பிறரைத் துன்புறுத்தி அடக்கியாளத்

தக்க பெருமிதமுண்டாக்கும்படியான அதிக நிலங்கள் கிடைப்பதில்லை. இதனால்தான் ஓர் உண்மையான, பழையமுறையிலுள்ள, சிறந்த கிராமத்தில் அநேகமாய் எல்லோருக்கும் நிலம் சமபாகமாயிருக்கும்.

# IV

இனி, கிராம சமுதாய நடவடிக்கைகளும் வயல்வெளி வேலைகளும் எவ்வாறு நடைபெறு கின்றன வென்று பார்ப்போம். தொழிலாளி களைப்போலவே பண்ணையாட்களுக்கும் மானிய மும் குடியிருப்பு வீடும் உண்டு. இவை தவிர, அறுப்புக்காலத்தில் கண்டு முதலில் கலத்திற்கு இவ்வளவென்ற ஒரு குறிப்பிட்ட பங்கும் பராம் பரைப் பண்ணையாட்களுக் குண்டு. தீபாவளி, பொங்கல் சமயங்களில் ஒரு ஜோடி வேஷ்டியும், படியும் உண்டு. வாரச்சாகுபடி செய்பவர்கள் அந்தந்த நிலத்தின் தரத்துக் கேற்றவாறு பழமை யாக விதிக்கப்பட்டுள்ள வீதப்படி நெல் பெறு

வார்கள். மிராசுதார்கள் பண்ணையாட்களின் வீட்டுச் சுக துக்கங்களில் பொறுப்புடையவர்களாய்ச் சமயங்களில் உதவியே தீரவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் 'தலையாரி' 'நீராணிக்கக்காரன்' என்ற சில்லறைச் சிப்பந்திகள் உண்டு. இவருள் தலையாரியின் வேலை கிராம ஆட்சிக்கு மிகவும் முக்கியமானது. கிராமக் காவல் அவன் பொறுப்பு. கிராமத்தின் உயிர்நிலை அவன் கையில் தான். ஊர்க் காவல் தவிர, கிராமப்பொது வேலைகளுக்கு ஆட்களைச் சேர்த்து அவற்றைக் கவனிப்பதும் அவன் பொறுப்பு. அவனுக்கும் முதல்தரமான மானியம் உண்டு. நீராணிக்கக்காரனுக்கும் மானியந்தான். அவன் வேலை, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல்லோருடைய வயலுக்கும் ஒன்றுபோல நீர்ப்பாசனத்தைக் கவனிக்கவேண்டியது. கண்டுமுதல் காலத்தில் நீராணிக்கக்காரனுக்கு ஒவ்வொரு பண்ணையிலும் ஒரு கோட்டு நெற்கதிர் பங்கு உண்டு.

இவர்களையெல்லாம் அடக்கியாண்டு கிராம நிர்வாகத்தைச் சரிவர நடத்துவதற்கு, வெளிநாடுகளிலும் பெயர்பெற்றதாகிய பஞ்சாயத்து முறை ஏற்பட்டுளது. 'பஞ்சாயத்து' என்பது ஐந்துபேர் கொண்டதோர் ஆலோசனைச் சபை; இது கிராமத்தார் ஒன்றுசேர்ந்து தமக்குள் அமைத்துக்கொள்வதாகும். இச்சபையின் தலைவர் 'முதல் பஞ்சாயத்து' அல்லது 'நாட்டாண்மைக்காரர்' எனப்படுவார். இப்பதவி வம்ச பரம்பரையாய் வரும். பிரிட்டிஷ் அரசாங்க முறைகள் பரவுமுன், நம் தமிழ்நாட்டில், பேருக்கு அரசர்கள் முடிதரித்துச் செங்கோல் பிடித்துச் சிங்காதனம் ஏறியிருந்தாலும், இப் பஞ்சாயத்துச் சபைகளே மிகச் சிறந்த ஆட்சியை நடத்திவந்தன.

பஞ்சாயத்து, சம்பளமில்லாத கௌரவவேலையாதலால் இதிலிருப்பவர்கள் பெரும்பாலும் நல்ல நிலையி லுள்ளவர்களாய்க் கிராமாபிவிருத்தியில் எப்பொழுதும் நோக்கமுடையவர்களா

யிருப்பார்கள். அதிலும், பஞ்சாயத்துத் தலைவர் பரம்பரைப் பிரபுவாய்க் கல்வியறிவும், சாந்தம், பொது நோக்கம், தருமசிந்தனை முதலிய சிறந்த குணங்களுமுடையவர்களாகவே யிருப்பது வழக்கம். ஆதலால் கிராமத்தில் அவரிட்டது சட்டமா யிருக்கும். நம் நாட்டில் இதுவரை குணத்திற்கே பெருமை யதிகமன்றிப் பணத்திற்கன்று. ஒருவனுடைய படாடோபத்திற்கும், அஞ்சாது தொழில் புரியும் ஆற்றலுக்குமாகப் பளபள வென்று மின்னும் வெள்ளி ரூபாய்கள் பரிசளிக்கப்படுவதில்லை. வணக்கம், ஒடுக்கம், சாந்தம், சீலம் இவைகளுக்குத்தான் கௌரவம். ஆனால், இம்முறையும், மேல்நாட்டு நாகரிகம் பழுத்த இந்த இருபதாம் நூற்றாண்டில் மாறிவருகிறது.

நாட்டாண்மைக்காரருக்கு எல்லா அதிகாரமும் இருந்தாலும், நடவடிக்கையில் அவர்கள் பலரை அனுசரித்தே போகவேண்டும். மலைச் சரிவுகளிலிருந்து ஒரு வழியின்றிப் பலமுகமாகப் புரண்டோடி வரும் மழை நீர், சமபூமியையடைந்

ததும் ஒரு வழிப்பட்டு 'ஆறு' என்ற பெயர் பெற்று வரம்பு கடவாமல் ஓடுவதுபோல, நமது நாட்டில் தரும பரிபாலனமென்னும் ஆற்றை ஒழுங்கு படுத்தியிருக்கிறார்கள். அந்த ஆறு வரம்பு கடக்க முடியாதல்லவா? ஆதலால் தருமத்தை விட்டு விலகிக் கிராமப் பஞ்சாயத்தும் நடக்கமுடியாது.

சாகுபடி காலத்தில் கிராமத்தின் நிலங்களைச் செவ்வை செய்யக் கிராமத்தா ரெல்லாருடைய ஊக்கமும் ஒத்த உழைப்பும் வேண்டும். ஆதலால், ஓர் உண்மையான கிராமத்தில் எல்லாரும் ஒற்றுமையுடையவர்களாகவேயிருப்பார்கள். ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையும், தருமசிந்தனையும் ஒற்றுமையுமே கிராமவாசிகளுக்கழகு. அவர்கள் அடுக்கடுக்காகப் புத்தகங்களை வாசியாவிட்டாலும், வரிசை வரிசையாக மேடைகளில் பிரசங்கங்களைக் கேட்காவிட்டாலும் அவர்களுடைய பொது அறிவு வளர்ச்சிக்கும், வாழ்க்கையில் தேர்ச்சிக்கும் குறைவில்லை. நிலத்திலும் தம்

வாழ்விலும் விழல் மண்டாதபடி தினந்தோறும் களையெடுத்த வண்ணமாகவே யிருப்பார்கள். இதன் பலனே கிராமத்தில் நோயற்ற வழ்வும், குறைவற்ற செல்வமும், தர்மசிந்தை பொறுமை சாந்தம் முதலிய உயர் குணங்களும் குடி கொண்ட குடிகள் நிரம்பியிருத்தலாகும்.

இவ்வுலகில் எல்லாம் அழியும் பொருள்களாதலால், உணவுப் பொருள்களையும் விற்றுக் காசாக்கிச் சேர்த்துப் பாங்கியில் போடும் புத்தியை நம் கிராமவாசிகளுக்கு ஈசன் கொடுக்கவில்லை. ஆகையால் அவர்கள் தமக்குக் கண்டு மிஞ்சும் காய்கறி, தானியங்கள் முதலியவற்றைச் சுற்றத்தாருக்கும், ஏழைகட்கும் கொடுத்துதவுவார்கள். சமாராதனை முதலிய தருமவழிகளிற் செலவிடுவார்கள். வயலில் உழைக்கும் பண்ணையாட்களுக்கும் அவரவர் தேவைக்கேற்ப வேண்டிய சமயங்களில் கொடுப்பார்கள். இவ்வாறு பலவகையிலும் அவை செலவிடப் படுவதன்றி விற்பதென்ற வழக்கமே கிடையாது. கிராமத்தார்

கள் உணவுப்பொருள்களை விற்பதென்பது சமீப காலத்தில் ஏற்பட்ட புதுவழக்கமாகும். இப்பொழுது குழந்தைகளருந்துவதற்குரிய பாலையும் விற்றுக் காசாக்கிக் காப்பிக்கொட்டையும் மண்ணெண்ணெயும் வாங்குகின்றனர்; என்ன கொடுமை! இத்தகைய கொடுமைகளின்றி மேற்கூறியபடி செவ்விய முறையில் நடந்துவந்ததனால் தான் நம்முடைய கிராமங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்ச் செழிப்புற்று ஓங்கி எங்கும் அமைதி நிலவ மேழிச் செல்வத்தின் கெடாத மேன்மைக்குச் சாட்சியாக விளங்கிவந்தன.

## V

இப்பொழுது நகரவாழ்க்கையில் முழுகியிருப்பவருக்கு, இதுவரை கூறியவையெல்லாம் ஏதோ புனைந்துரையாகத் தோன்றலாம். ஆயினும், காவேரிதீரத்தில், பேராலமரம்போல நெடுங்காலமாக விளங்கிவரும் சில இனும் கிராமங்களில் மேற்கூறிய மாசற்ற முறைகள் இன்றும் வழங்கி வருவதைக் காணலாம். எல்லாக் கிராமங்களிலும்

மீண்டும் இம்முறைகள் வந்து, எளிய இனிய வாழ்க்கை நடைபெற்றால்தான் நம் நாட்டில் சுவர்க்க இன்பத்தினு மினிய சுகமும், அமைதியும் உண்டாகி நிலைபெறும்.

'உழவே தலை' என்று நெடுங்காலமாய் ஊன்றி நிற்கும் கிராமமக்களின் மனம், பிற ஆடம்பரத் தொழில் முயற்சிகளிற் செல்லுமாயின் கிராமங்களின் பெருமை நிலையாது. ஏனெனில், கிராமங்களின் அளவையும் அழகையும் வேறுபடுத்தாமல், இயற்கைக் குடிசைகளில் அவ் ஆடம்பர யந்திரத் தொழில்களை ஒருநாளும் நடத்தமுடியாது. ஆதலால், இத்தகைய மாறுபட்ட ருசியே நம் கிராமவாழ்க்கையின் சிதைவுக்கு முக்கிய காரணமாகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பல பல படையெடுப்புக்களையும் சச்சரவுகளையும் ஆட்சி முறைகளையும் தாங்கிப் பிழைத்து ஓங்கி வளர்ந்துவந்த நமது கிராமங்களின் சீர்கேட்டுக்கு, ஆடம்பர வாழ்க்கையில் மோகமே தூமகேதுவாகத் தோன்றியுளது. பல

புயற்காற்றுக்கும் தப்பி ஓங்கிவளர்ந்து, நன்கு குலைகுலையாய்க் காய்க்கும் ஒரு தென்னைமரத்திற்கு வேர்க்கறையான் பற்றியது போலத் திருந்திய கிராமவாழ்க்கைக்கு இந்த மோகமாகிய மனக்கறையான் பற்றியுளது.

மேல்நாட்டு நாகரிகமாகிய புது வெள்ளம் நம் நாட்டிற் பரவிவருதலால், பல பல புதிய பழக்க வழக்கங்கள் தோன்ற, அவை நமது புராதன ஆசாரங்களாகிய பழைய வெள்ளத்தை யடித்துக்கொண்டு போய்விடுகின்றன. அவை, அவ்வப் போதுண்டாகும் அற்ப சந்தோஷமாகிய மயக்கத்தைத் தருவனவன்றி வேறில்லை. அவற்றால் இம்மையில் அமைதியான, இனிய, எளிய வாழ்வையோ அல்லது மறுமையில் நல்ல பயனையோ அடைய முடியாது.

ஆரம்பத்தில் சிறிது சௌகரியத்திற்காகவும் ஆடம்பரத்திற்காகவும் வாங்கும் பொருள்களும் கைக்கொள்ளும் பழக்கங்களும் நாளடைவில் இன்றியமையாதனவாய் விடுகின்றன. அவற்றிற்

காக நம் உணவையே விற்று அவற்றைப் பெற வேண்டியிருக்கிறது. அதனால் வருஷத்திற்கு வருஷம் நம்முடைய செல்வங் குறைய, கிராமங் களும் க்ஷீணிக்கின்றன. கிராமங்களில் பெரிய சீமான்களாய், நெல்களஞ்சியம் எந்நாளும் குறையாமலிருக்கக் கூடியவர்களுக்கும், இப் பொழுது, ஆறுமாதத்துச் சாப்பாட்டுக்கு வேண் டிய நெல் கூடக் கையிலிருப்பது அரிதாய்விட் டது. அவ்வாறாயின் கூலிவேலை செய்வோர் நிலைமையைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? இந்தக் கஷ்டத்தால் அவர்கள் தங்கள் மானியங் களையும் வீடு வாசல்களையும் ஊரையும் விட்டு, நகரங்களையும் அந்நிய நாடுகளையும் தேடிச் சென்று சொல்ல முடியாத கஷ்டங்களுடன் பல ஈனத் தொழில்களைச் செய்து வயிறு வளர்க்க நேருகிறது. அப்படியும் அரை வயிற்றுக்கஞ்சிக் குத்தான் கிடைக்கிறது. அதிலும் மண்ணைப் போடப் பல கெட்ட பழக்கங்கள் அவர்களைப் பற்றிக்கொள்கின்றன. கிராமங்களில் அவர்கள்

வயிற்றுக்குத் தாழாமல் சோறு கிடைத்தாலல்லவோ அது முணுமுணுக்காமல் வேலை செய்யும்; மேழிச் செல்வமும் வளரும்.

நம் நாட்டுக்கு வந்த கேடு இதனால் மட்டுமன்று. கிராமங்களில் தலைமையுள்ளவர்கள்—பரம்பரைப் பஞ்சாயத்தார்கள்—நாட்டாண்மைக்காரர்கள் கூட, ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்று, குமாஸ்தாக்களாகவும், கலெக்டர்களாகவும், ஜட்ஜுகளாகவும், வக்கீல்களாகவும் ஆகிப் பொருளை மூட்டைமூட்டையாக வாரிக்கட்டலாமென்னும் நோக்கத்துடன் தங்கள் கிராமம் பாழாக நகரங்களில் சென்று தங்கி வீணே உழைத்துக் கைப்பொருளையும் இழந்து கஷ்டமடைகிறார்கள். இதுவும் கிராமங்களுக்கு வந்த ஒரு பெரிய துரதிர்ஷ்டமல்லவா ? இந்தப் பேராசையே சாத்விக விருத்தியிலிருந்து நம் மனத்தைத் திருப்பிப் பொய்க்காசு செய்யும் பொல்லாப் புத்தியை உண்டாக்கி, நோயற்ற உயர்ந்த கிராம வாழ்க்கையைத் தொலைத்து, நகரங்களின் சாக்கடையில்

நம்மைத் தள்ளிவிட்டது. கிராமங்களில் மன வமைதியுடன் கையிற் சுவடியேந்தித் தியானஞ் செய்துவந்த நாம், நகரங்களின் சந்தையிரைச் சலிற் குடியிருந்துகொண்டு பெட்டியடியில் உட் கார்ந்து கையில் தராசு பிடிக்கத் தொடங்கிவிட் டோம். ஆகவே கிராமங்களின் செல்வமும் அமைதியும் சீர்குலைவது ஆச்சரியமா?

நமது பாரத நாட்டில், தேனடையிலுள்ள சிற் றறைகள் போல 7 லக்ஷம் கிராமங்களிருக்கின் றன. அவற்றிலுள்ள 30 கோடி தேனீக்களும் பரி சுத்தமான, ஈசுவரனுக்குப் பிரியமான தும்பைப் பூவைவிட்டுக் கேவலமான புளியம் பூவைச் சுற்றித் தேன் சேகரிக்க முயலுகின்றன. இந்த 7 லக்ஷம் கிராமங்களின் நிலைமையையும் நேர்படுத்துவதே இப்பொழுது இந்தியாவின் முதற்கடமை. அதுவே நமது அழியாத பாக்கியம். ஆதலால் இப்பொழுது நாட்டி லேற்பட்டுள்ள புதிய கிளர்ச்சியின் முக்கியமான வேலை முதலில் சீர் குலைந்துள்ள இந்த லட்சக்கணக்கான கிராமங்

களைத் திருத்தியமைப்பதாகும். அவ்வாறு செய்
வதில், மேல்நாட்டு நாகரிகத்தின் நல்ல அம்சங்
களையும், சுகாதார முறைகளையும் கைக்கொண்டு
கலந்து மேன்மைப்படுத்த வேண்டும். அப்படிச்
செய்யின் நம் நாட்டில் மட்டுமன்று; உலக
முழுதுமே கிராமவாழ்வின் சிறப்பை நாம் பரவச்
செய்தவர்க ளாவோம். அது நமது கடமைய
மாகும்.

## VI

இனி, கிராமவாசத்தின் மேன்மைக்குக் கார
ணமும், அதன் உட்பொருளும், அதனால் உலகத்
தார் அறிந்துகொள்ள வேண்டியதும் என்ன
வென்று பார்ப்போம்.

உலகில் மேம்பட்டுவரும் ஜனசமூகங்களின்
மேடுபள்ளங்களுடன் கூடிய இல்லறவழியை
கிராமவாழ்க்கையானது ஒரு நிரவின சமவழி
யாக்குகிறது. கிராம வாழ்க்கையில்தான் கடவு
ளுக் குகந்ததொரு சிறந்தகொள்கை யிருக்கிறது.

அதாவது, உயர்ந்தோர் தாழ்ந்தோரென்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் அவரவர் தேவைக்கேற்ப உணவுப்பொருள்கள் தட்டாது கிடைக்க வேண்டுமென்பது. அதுதான் நம் நாட்டின் சிறந்த கொள்கை. அது கிராமங்களில்தான் உளது. சாமர்த்தியத்துக்குத் தக்கபடி சம்பாத்தியமென்ற மேல்நாட்டுக் கொள்கைக்கு நமது புண்ணிய பூமியில் இடமில்லை. பசியென்பது எவருக்கும் சமந்தானே. மிகச்சுறுசுறுப்புள்ள தொழிலாளியாயிருந்தாலென்ன, பண்ணை வேலை செய்யும் பேதைப் பறையனாயிருந்தாலென்ன? 'இடும்பைகூர் என்வயிறே உன்னோடு வாழ்தலரிது' என்றபடி இந்தச் சாண்வயிறு எல்லோருக்கும் ஒன்றுதானே.

நம் நாட்டில் நற்புத்திக்கும், நன்னடக்கைக்கும், விடாமுயற்சிக்கும், தெய்வபக்திக்கும், பிற நற்குணங்களுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளமும் வருஷாந்த உயர்வும் பரிசாக அளிப்பது வழக்கமில்லை. அத்தகைய மேன்மைக் குண

முடையோருக்கு வணக்கமும் மரியாதையுமே பரிசு. எவருக்கும் இன்பமளிக்கத்தக்க இவ்வுயர்ந்த சட்டமல்லவோ உலகமெங்கும் பரவ வேண்டும். நமது புராதன கிராம வாழ்க்கையின் உயர்ந்த லக்ஷ்யம் இதுதான்.

'இந்தியாவில் உழவைத்தவிர வேறு சிறந்த கைத்தொழில் தெரியாமையால் குக்கிராமங்களில் கிடந்து கஷ்டப்படவேண்டி யிருக்கிறது' என்று சில நகரவாசிகள் அறியாமையால் கூறுவதுண்டு. உண்மை அப்படியன்று. மக்கள் சாத்விக ராஜஸ தாமஸ குணங்களின் வசப்பட்டவர்களாகையால், அவ்வியற்கையை யறிந்து, முக்கண் படைத்த நம் முனிவர்கள் அம்முக்குணங்களிற் சிறந்த ஸாத்விகம் ஓங்கவும், அதமமாகிய தாமஸம் குறையவும் ஏற்றவகையில் கிராம வாழ்க்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

எப்பொழுதும் கர்மாவையே செய்யும்படி தூண்டும் மாமிச பிண்டமாகிய இச்சரீரத்திற்

கும், கர்மாவை விட்டு விலகி ஏகாந்தமாய் ஈச னுடன் கலந்து நிற்க விரும்பும் ஆத்மாவுக்கும் அபிவிருத்திக்குரிய சாதனங்கள் கிராம வாழ்க் கையிலேதான் கிடைக்கும். உயிருக்கு உடலும், அலைகடலில் அகப்பட்டுப் புயலால் மோதுண்டு தத்தளிக்கும் மரக்கலத்துக்கு அதனை நங்கூரம் பாய்ச்சி அசையாமல் நிறுத்துதற்கேற்ற அலை யற்ற துறைமுகமும் போல இந்த மக்கட்பிறப் பிற்குக் கிராமவாழ்க்கையே சிறந்த ஆதாரமா கும். அதன்பெருமை அளவிடற்கரியது.

PRINTED AT THE M. L. J. PRESS, MYLAPORE, MADRAS.